**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**நாள்** 01.11.2025

**அசல் வழக்கு எண். 244/2024**

**வா.சா.1. – லட்சுமி நரசிம்மன் , த/பெ. ராஜகோபாலன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்தில் நான்கு எல்லை விவரம் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிடவில்லை. உங்கள் வழக்குரையில் வென்டிலேட்டர் மேல் கூரை அமைத்து உள்ளார்கள் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்தக் கூரை பிரதிவாதிகள் இடத்தில் அமைக்கப்பட்டது என்றால் சரியில்லை என்னுடைய இடத்தில் அமைத்துள்ளார்கள். ஆக்கிரமிப்பு செய்து உள்ளார்கள். தாவா சொத்து எத்தனை அடிக்கு கட்டிடம் என்றால் ஒரே தளம் தரை தளம் மட்டுமே ஆகும். பிரதிவாதிகள் மேலே ஒரு கூடுதலாக அடுக்கு கட்டி உள்ளார்கள் என்றால் சரிதான் முதல் மாடி செல்லும் வழியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். பிரதிவாதிகள் வடிநீர் குழாய் அமைத்துள்ளதாக சொல்கிறீர்கள் எந்த இடத்தில் அமைத்துள்ளார்கள் என்றால் வாசலில் அமைத்துள்ளார்கள். அதை உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். வாசலில் குழாய் வைத்துள்ளதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு நீங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் முதலில் 5 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு நோட்டீஸ் அனுப்பினீர்கள் என்றால் சரிதான். வழக்குரையில் 3 லட்சம் நஷ்ட ஈடு கொடுத்தால் போதும் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் மூன்று லட்ச ரூபாய் நஷ்ட ஈடு கோரினீர்கள் என்றால் நஷ்டத்தினுடைய எஸ்டிமேட் ஆகும். அதனை மெய்ப்பிப்பதற்கு பொறியாளர் இடமிருந்து ஏதேனும் ரிப்போர்ட் வாங்கிய தாக்கல் செய்தீர்களா என்றால் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் மூலமாக ஏதேனும் ரிப்போர்ட் தாக்கல் செய்தீர்களா என்றால் செய்யவில்லை. பிரதிவாதிகள் கட்டிடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டினார்கள் என்று பொய் என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் சுற்றுச்சுவர் மீது பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியதாக நீங்கள் சொல்வது தவறு அவருடைய இடத்தில்தான் சுவர் அமைத்து கட்டிடம் கட்டினார்கள் என்றால் சரியில்லை.

மூன்று லட்ச ரூபாய் கட்டிட சேதாரத்திற்கு ரசீது தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. உங்கள் வழக்கு மூலம் சரியில்லை என்று சொன்னால் சரி இல்லை. நீதிமன்றத்தில் உங்களுக்கு பரிகாரம் வழங்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி இல்லை. வழக்கு செலவுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.